# விலைக்கோரல் அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம்

## இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் ஆவணக்காப்புக்காக ஆவணங்களை ஸ்கேன் செய்து, சுட்டெண் இட்டு தயார்படுத்துவதற்கான விலைக்குறிப்பீடுகளுக்கான கோரிக்கை

1. ஆவணக்காப்புக்காக ஆவணங்களை ஸ்கேன் செய்து, சுட்டெண் இட்டு தயார்படுத்துவதற்கான பணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு கீர்த்திமிக்க நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைக்குறிப்பீடுகள் அழைக்கப்பட்டுள்ளன. 2021.06.30 இல் முடிவடைந்த கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் குறைந்தது ஒரு கீர்த்திமிக்க பாரியளவிலான நிறுவனத்திற்கு இதனையொத்த பணியினை வழங்குவதில் அனுபவமுள்ள வாய்ப்புமிக்க விலைக்குறிப்பீட்டாளர்கள் இவ்விலைக்கோரலுக்கு விலைமனு சமர்ப்பிப்பதற்கு தகுதிபெறுவர்.

2. விலைக்குறிப்பீட்டு ஆவணங்களை 2021.09.22 தொடக்கம் 2021.10.07 வரை மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிக்கிடையில் வங்கி வேலைநாட்களில் லொயிட்ஸ் கட்டடம், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம், இல.13 சேர் போரன் ஜெயதிலக்க மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரியில் உதவி மற்றும் விசாரணைக் கருமபீடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் www.cbsl.gov.lk என்ற இணையத்தளத்தில் "விலைக்கோரல் அறிவித்தல்கள்" அல்லது ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் www.epf.lk என்ற இணையத்தளத்தில் "ஊழியர் சேமலாப நிதியத் திணைக்கள விலைக்கோரல்கள்" என்பவற்றிலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

3. முத்திரையிடப்பட்ட விலைக்கோரல்கள், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆவணக்காப்புக்காக ஆவணங்களை ஸ்கேன் செய்து, சுட்டெண் இட்டு தயார்படுத்துவதற்கான விலைக்குறிப்பீடுகள்" எனக் குறிப்பிடப்பட்டு லொயிட்ஸ் கட்டடம், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம், இல.13 சேர் போரன் ஜெயதிலக்க மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பெட்டியினுள் இடப்படவேண்டும் அல்லது ஊழியர் சேமலாப நிதியக் கண்காணிப்பாளர், தளம் 12, கோபுரம் 05, இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

4. விலைக்குறிப்பீடுகள் 2021.10.07 அன்று பி.ப 2.30 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் தளம் 12, கோபுரம் 05, இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரியில் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் மாநாட்டு மண்டபத்தில் உடனடியாகத் திறக்கப்படும். விலைக்குறிப்பீட்டாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் அப்போது தொழிற்பாட்டிலுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குட்பட்டு விலைக்கோரல் திறக்கும் போது பிரசன்னமாகியிருக்கலாம். விலைக்குறிப்பீட்டைத் திறக்கும் நேரத்தில் இலங்கை மத்திய வங்கியினால் கடைப்பிடிக்கப்படுகின்ற நிலவுகின்ற கொவிட்-19 தடுப்பு முறைகளைக் கருத்திற்கொண்டு பாதுகாப்பு இசைவு ஏற்பாடு வழங்கப்படும்.

5. ஏதேனும் மேலதித் தெளிவுபடுத்தல்களுக்கு விலைக்குறிப்பீட்டாளர்கள், நிர்வாகப் பிரிவின் உதவிக் கண்காணிப்பாளரை 011 2477969/011 2477962 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக அல்லது ஊழியர் சேமலாப நிதியக் கண்காணிப்பாளரின் தனிப்பட்ட செயலாளரை 011 2477982 என்ற தொலைபேசி இலக்கம், tenders.epf@cbsl.lk என்ற மின்னஞ்சல் ஊடாக தொடர்புகொள்ளுமாறு கேரப்படுகின்றனர்.

**கண்காணிப்பாளர்**
**ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம்**
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி: 011 2477982, 011 2477969 மின்னஞ்சல்: tenders.epf@cbsl.lk வெப்தளம் : www.epf.lk